**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 202** **நாள் : 12.12.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி வ.உ.சி. நகரிலுள்ள பிரேசர் பிரிட்ஜ் ரோடு என்பது தமிழில் ''தேர்வாணையச் சாலை'' எனவும், ஆங்கிலத்தில் ''TNPSC Road'' எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு–59, வ.உ.சி. நகரிலுள்ள ''பிரேசர் பிரிட்ஜ் ரோடு'' என்பது தமிழில் ''தேர்வாணையச் சாலை'' எனவும், ஆங்கிலத்தில் ''TNPSC Road'' எனவும் பெயர் மாற்றம் செய்யும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கு சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.952/2018, நாள் : 28.11.2018ஆம் நாளிட்ட மன்றத் தீர்மானத்தில் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் ''பிரேசர் பிரிட்ஜ் ரோடு'' என்பது தமிழில் ''தேர்வாணையச் சாலை'' எனவும், ஆங்கிலத்தில் ''TNPSC Road'' எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பெயர் மாற்றம் செய்யப்பட்ட சாலைக்கான புதிய பெயர் பலகை வைக்க பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**